CASE NO : ID 119/2022

NAME : MW1 – பூபாலன்

DATE : 08.04.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி,

மனுதாரர் உழைப்போர் உரிமை இயக்கம் என்ற சங்கத்தில் உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சங்கத்தின் தலைமை பொறுப்பில் இருந்தவர்கள் அனைவரையும் வேறு மாநிலத்திற்கு பணியிட மாற்றம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. தினேஷ் என்பவரை 22.03.2017 ல் பந்த் நகருக்கு பணியிட மாற்றம் செய்தோம் என்றால் சரிதான். அவர் உழைப்போர் உரிமை இயக்கத்தின் செயலாளர் என்பதால் அவரை பணியிட மாற்றம் செய்தோம் என்றால் சரியல்ல. மாணிக்க வாசகம் என்ற பணியாளரையும் 19.07.2017 ல் மேற்படி சங்கத்தின் உறுப்பினர் என்பதால் வேறு மாநிலத்திற்கு பணியிட மாற்றம் செய்துள்ளோம் என்றால் பணியிட மாற்றம் செய்துள்ளோம். ஆனால் சங்க உறுப்பினர் என்பதால் பணியிட மாற்றம் செய்யவில்லை. கனகராஜ், மருதாசலம், ரகுபதி போன்றவர்களை 28.08.2017ல் பணியிட

மாற்றம் செய்தோம் என்றால் சரிதான். தேவைக்கேற்ப பணியிட மாற்றம் செய்தோம். மேற்படி நபர்கள் உழைப்போர் உரிமை இயக்கத்தின் பொறுப்பில் இருந்த காரணத்தினால் தான் அவர்களை எதிர்மனுதாரர் நிறுவனம் பணியிட மாற்றம் செய்தது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சங்கம் எதுவும் இயங்கவில்லை. 24.01.2018ல் மேற்படி சங்கம் அமைத்ததற்கு அதனுடைய தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் சீனிவாசன், சந்திரசேகர், ஜபதுரை மற்றும் 3 நபர்களை பணியிட மாற்றம் செய்தோம் என்றால் சரியல்ல. நிர்வாக தேவைக்காக பணியிட மாற்றம் செய்தோம். 2016-2017 காலகட்டத்திலேயே மேற்படி சங்கம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொழிலாளர்கள் தொடர்ந்து முன் வைத்து வந்தார்கள் என்றும், அதில் மனுதாரர் முக்கிய உறுப்பினராக இருந்து வந்தார் என்றும், ஆகவே பழிவாங்கும் நோக்கத்தோடு நிர்வாகம் மனுதாரர்க்கு மிகையான தண்டனை கொடுத்துள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மாதிரியான சங்கம் எதுவும் செயல்படவில்லை. மனுதாரர் absent ஆன காரணத்தினால் தான் நடவடிக்கை எடுத்தோம். மேற்படி தொழிற்சங்கம் உருவாவதற்கு மனுதாரர்

மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்ப்பட்டு வந்ததால் தான் வேறு பிரிவுக்கு அவரை மாற்றம் செய்தது என்றால் சரியல்ல. ஒரு தொழிலாளி எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியாற்றினால் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு (safety atmosphere in working condition) கொடுக்க வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்றால் சரிதான். மனுதாரர் அவர் உயரம் குறைந்தவர் என்பதை நன்கு அறிந்திருந்தும் அவர் செய்ய முடியாத வேலையை பழிவாங்கும் நோக்கோடு கொடுத்தோம் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் பாரா 13ல் தொழிலாளர் துறை அங்கீகார மனு விசாரணையில் நிர்வாக தரப்பு சாட்சிகளை விசாரித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நிர்வாகத்தின் தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டு தொழிலாளி தரப்பில் குறுக்குவிசாரணையும் செய்யப்பட்டது. நிர்வாகத்தின் தரப்பு சாட்சியை தொழிலாளி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தோம் என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நிர்வாகத்தின் தரப்பு சாட்சியை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு ஆவணங்கள் மற்றும் வாதுரையின்

அடிப்படையில் மட்டுமே பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய்யான தகவல்களை எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான தகவல்களை தான் தெரிவித்துள்ளேன். மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய show cause noticeல் குறிப்பிட்டுள்ளவாறு absent ஆகவில்லை என்றும் அவருக்கு பணியிட விபத்து ஏற்பட்டதால் தான் அவரால் பணிக்கு வர இயலவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.